IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

S.O. P. No. 111/2024

சாட்சி : PW1

பெயர் : சேகர் தேதி: 09-06-2025

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

மனுதாரர்கள் மணிவண்ணன், ரவிச்சந்திரன், பூங்கொடி எனது உறவினர்கள் அல்ல. ஒரே தெருக்காரர்கள். மனுதாரர் மணிவண்ணன் உடன் பிறந்தவர்கள் ரவி, சீனிவாசன், பூங்கொடி (2 சகோதரர்கள், 1 சகோதரி) ஆவார்கள். ரவிச்சந்திரனை, ரவி என்று அழைப்பார்கள். ரவிச்சந்திரனின் அப்பா பெயர் கந்தசாமி, அம்மா பெயர் தெரியவில்லை. ரவிச்சந்திரனின் அம்மா இறந்த விவரம் தெரியும். ஐந்தாண்டுக்கு முன்பு இறந்தார். அவரது அப்பா இறந்த ஆண்டு தெரியாது.

மணிவண்ணனின் சகோதரர் சீனிவாசன் ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். அவர் இறந்துவிட்டார். அதனால் அவரது சகோதரர்கள் மற்றும் சகோதரியும் இம்மனு தாக்கல் செய்துள்ளார்கள். அது எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. சீனிவாசன் இறந்து இரண்டு ஆண்டுகளாகிறது. தேதி தெரியவில்லை. சீனிவாசனை எனக்கு நேரடியாக தெரியும். சீனிவாசன் ஆட்டையாம்பட்டி, பூக்கார தெருவில் வசித்து வந்தார். நான் சேலம், ராஜபாளையத்தில் வசித்து வருகிறேன். அது ஆட்டையாம்பட்டியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

சீனிவாசன் இறக்கும்போது 54 வயது இருக்கும். மேற்படி சீனிவாசன் திருமணம் செய்து கொள்ளவில்லை. என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியவாறு இறந்துபோன சீனிவாசன் அவரது பணிப்பதிவேட்டில் அவரது நியமானதாரர்கள் யாரை குறிப்பிட்டுள்ளார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றாலும் மணிவண்ணன் கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- S. எழில் வேலவன்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.